**சுருக்கம்**

நில எடுப்பு – ஈரோடு மாவட்டம் – ஈரோடு வட்டம் – 37, சர்க்கார் சின்ன அக்ரஹாரம் கிராமம் புல எண்கள்11/1பி, 11/2பி மற்றும் 11/3பி – காவிரி ஆற்றின் குறுக்கே உயர்மட்டப் பாலம் அமைக்கும் பணிக்காக அணுகு சாலை அமைக்கும் பணிக்கு நிலம் கையகப்படுத்துதல் – தமிழ்நாடு நெடுஞ்சாலைச் சட்டம் 2001, பிரிவு 15(1)ன் கீழான அறிவிக்கையினை தமிழ்நாடு அரசிதழில் வெளியிடுதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**நெடுஞ்சாலை (ம) சிறுதுறைமுகங்கள் (எச்.எஸ்1) துறை**

**அரசாணை (டி) எண்:3** **நாள்: 03–01–2018**

**ஹேவிளம்பி, மார்கழி–19, திருவள்ளுவர் ஆண்டு 2048**

**படிக்கவும்:**

ஈரோடு மாவட்ட வருவாய் அலுவலர் அவர்களின் கடித எண் ந.க.21084/2014/ஆ1, நாள் 04.04.2017.

——————

**ஆணை:–**

ஈரோடு மாவட்டம், ஈரோடு வட்டம், 37, சர்க்கார் சின்ன அக்ரஹாரம் கிராமம் புல எண்.11/1பி–யில் 0.01.53 ஹெக்டேர், 11/2பி–யில் 0.01.66 ஹெக்டேர் மற்றும் 11/3பி–யில் 0.14.00 ஹெக்டேர் (மொத்தம் 0.17.19 ஹெக்டேர்) நன்செய் நிலங்களை, காவிரி ஆற்றின் குறுக்கே உயர்மட்டப் பாலம் அமைக்கும் பணிக்காக அணுகு சாலை அமைக்கும் பணிக்கு நில எடுப்பு செய்ய, ஈரோடு மாவட்ட வருவாய் அலுவலரால் மேலே படிக்கப்பட்ட கடிதத்தில் அரசுக்கு சமர்ப்பிக்கப்பட்ட, தமிழ்நாடு நெடுஞ்சாலைச் சட்டம் 2001, பிரிவு 15(1)ன் கீழான அறிவிக்கைக்கு அரசால் ஏற்பளிக்கப்பட்டு, அதனை தமிழ்நாடு அரசிதழில் வெளியிட ஆணையிடப்படுகிறது.

2. இவ்வரசாணையின் இணைப்பில் கண்டுள்ள அறிவிக்கையினை, தமிழ்நாடு அரசிதழில் அடுத்த வெளியீட்டில் வெளியிடுமாறும், அவ்வாறு வெளியிடப்படும் அரசிதழின் 10 நகல்களை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை, சென்னை–9 மற்றும் ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ஆகியோருக்கு அனுப்புமாறும் அரசு மைய அச்சகத்தின் பணி மேலாளர் அவர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

(ஆளுநரின் ஆணைப்படி)

ராஜீவ் ரஞ்சன்,
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்

**பெறுநர்**

பணி மேலாளர், அரசு மைய அச்சகம், சென்னை–79 (இணைப்புடன்).

தலைமைப் பொறியாளர் (நபார்டு மற்றும் கிராமச் சாலைகள்),
நெடுஞ்சாலைத்துறை, சென்னை–25.
தலைமைப் பொறியாளர் (கட்டுமானம் (ம) பராமரிப்பு), நெடுஞ்சாலைத்துறை,
சென்னை–25.
மாவட்ட ஆட்சித்தலைவர், ஈரோடு.

**நகல்**
வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, சென்னை–9.
அரசு கூடுதல் தலைமைச் செயலாளரின் தனிச் செயலாளர், நெடுஞ்சாலை (ம) சிறு துறைமுகங்கள் துறை, சென்னை–9.

**கோ.எண்.2675/எச்.எஸ்.1/2017**

இருப்பு கோப்பு / உதிரி நகல்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்

# இணைப்பு

## அறிவிக்கை

ஈரோடு மாவட்டம், ஈரோடு வட்டம், 37, சர்க்கார் சின்ன அக்ரஹாரம் கிராமத்தில் அமைந்துள்ளதும், கீழ்க்காணும் விவர அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளதுமான நன்செய் நிலங்கள் ஒரு பொது நோக்கத்திற்காக அதாவது காவிரி ஆற்றின் குறுக்கே அமைக்கும் உயர் மட்டப்பாலத்திற்கு அணுகு சாலை அமைக்கும் பணிக்காக தேவைப்படுகிறது என்று தமிழ்நாடு அரசுக்கு தோன்றுவதால், அதன்படி, ஈரோடு மாவட்டம், ஈரோடு வட்டம், 37, சர்க்கார் சின்ன அக்ரஹாரம் கிராமம், புல எண்.11/1பி–யில் 0.01.53 ஹெக்டேர் 11/2பி–யில் 0.01.66 ஹெக்டேர் மற்றும் 11/3பி–யில் 0.14.00 ஹெக்டேர் (மொத்தம் 0.17.19 ஹெக்டேர்) நன்செய் நிலங்களை, கையகப்படுத்தவும் மற்றும் மேற்படி நிலங்களுக்கான இழப்பீட்டுத் தொகையை நெடுஞ்சாலைத்துறையின் ஈரோடு கோட்டப் பொறியாளர் (நபார்டு மற்றும் கிராமச் சாலைகள்) அவர்களால் பராமரிக்கப்படும் வைப்புக் கணக்கிலிருந்து வழங்கவும் தீர்மானித்து, மேற்காணும் நிலங்களின் உரிமையாளர், உரிமை கோருபவர், அனுபவத்தில் வைத்துள்ளவர் அளித்த காரணங்களையும் பரிசீலனை செய்தபின் 2001 ஆம் ஆண்டு தமிழ்நாடு நெடுஞ்சாலைச் சட்டம் பிரிவு 15 உட்பிரிவு (1) (தமிழ்நாடு சட்டம் 34/2002)–ன் கீழ் பின்வரும் அறிவிப்பு பிரசுரம் செய்யப்படுகிறது.

## அறிவிப்பு

தமிழ்நாடு நெடுஞ்சாலைச் சட்டம் 2001, பிரிவு 15 உட்பிரிவு (1) (தமிழ்நாடு சட்டம் 34/2002)–ன் கீழ் அறிவிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் கீழ், மாண்புமிகு தமிழக ஆளுநர் அவர்கள், ஈரோடு மாவட்டம், ஈரோடு வட்டம், 37, சர்க்கார் சின்ன அக்ரஹாரம் கிராமத்தில், ஈரோடு சாலை கி.மீ.94/2–94/660ல் உயர்மட்டப்பாலத்திற்கு அணுகுசாலை அமைத்தல் பணிக்காக கீழ்க்காணும் விவர அட்டவணையில் குறிப்பிட்டுள்ள சுமார் 0.17.19 ஹெக்டேர் நன்செய் நிலங்கள் கையப்படுத்தப்படுகிறது என இதன் மூலம் அறிவிக்கின்றார்.

இந்நிலங்களின் வரைபடங்கள் ஈரோடு மாவட்ட வருவாய் அலுவலர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ளது. அவற்றை அலுவலகப் பணி நேரத்தில் எப்போது வேண்டுமானாலும் பார்வையிடலாம்.

### அட்டவணை

**மாவட்டம்: ஈரோடு** **வட்டம் : ஈரோடு**

**கிராமம்: 037 சர்க்கார் சின்ன அக்ரஹாரம்**

| வ. எண் | புல எண் | புதிய உத்தேச உட்பிரிவு எண் | மொத்தப் பரப்பு | கையகப்படுத்த உள்ள நிலத்தின்பரப்பு மற்றும் வகைப்பாடு (ஹெக்டேரில்) | புல எல்லைகள் விபரம் | நிலமெடுப்பு பரப்பின் தற்போதைய அனுபவதாரர்கள்/நிலத்தின் மீது கொண்டாடுபவர்கள் | மரங்கள் கிணறுகள் கட்டுமானங்கள் /மற்றவை |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
| 1 | 11/1 | 11/1பி | 0.04.00 | 0.01.53<br>ரயத்துவாரி நன்செய் | வடக்கில்–ரீச10<br>கிழக்கில் –ரீச 11/2பி<br>தெற்கில்–ரீச12, 11/1எ<br>மேற்கில் –ரீச 12 | அலாவுதீன் பாதுஷா அவுலியா தர்க்காவின் மேற்பார்வை முத்தவல்லிகள் ஹாஜி எஸ்.ஏ.முகமது அலி–1 ஹாஜி கே.ஏ.எஸ்.கே. உசேன் அலி–2 | தேக்கு மரம்–3 |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 2 | 11/2 | 11/2பி | 0.03.50 | 0.01.66<br>ரயத்துவாரி நன்செய் | வடக்கில்–ரீச10<br>கிழக்கில் –ரீச 11/3பி<br>தெற்கில்–ரீச 11/2ஏ<br>மேற்கில் –ரீச 11/1பி | (லேட்) காளியப்ப கவுண்டர் மகன் சண்முகம் | தேக்கு மரம்–2 சிமெண்ட் சீட்டினாலான தற்காலிக செட்–1 தகர சீட்டினாலான தற்காலிக செட்–1 |
| 3 | 11/3 | 11/3பி | 0.34.50 | 0.14.00<br>ரயத்துவாரி நன்செய் | வடக்கில்–ரீச10<br>கிழக்கில் –ரீச 49<br>தெற்கில்–ரீச 11/3டி,3சி,3ஏ,11/4<br>மேற்கில் –ரீச 11/2பி | அலாவுதீன் பாதுஷா அவுலியா தர்க்காவின் மேற்பார்வை முத்தவல்லிகள் ஹாஜி எஸ்.ஏ.முகமது அலி–1 ஹாஜி கே.ஏ.எஸ்.கே. உசேன் அலி–2 | புளிய மரம்–1 புங்க மரம்–1 சிறிய புங்க மரம்–1 பலன் தென்னை–2 பழைய ஓட்டு வீடு–1 |
| | | மொத்தம் | 0.42.00 | 0.17.19 | | | |

ஒப்பம்/–XX
ராஜீவ் ரஞ்சன்,
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்

//உண்மை நகல்//

பிரிவு அலுவலர்.